අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
Ministry of Education, Higher Education and Vocational Education
கல்வி,உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

අධ්‍යයන පොදු සහතික සාමාන්‍ය පෙළ විභාගය - 2026
கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2026
General Certificate of Education (Ordinary Level) Examination - 2026

உதவி மதிப்பீடு
උපකාරක තක්සේරුව
Supportive Assesment

தமிழ் மொழி மூலம்
දෙමළ මාධ්‍යය
Tamil Medium

புவியியல்
භූගෝල විද්‍යාව
Geography



வினாப்பத்திரம் I/II - ප්‍රශ්න පත්‍රය I/II - Question Paper I/II

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
தேசிய மொழிகள் மற்றும் சமூக விஞ்ஞான கிளை
අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
ජාතික භාෂා හා මානව ශාස්ත්‍ර ශාඛාව
Ministry of Education, Higher Education and Vocational Education
National Languages and Humanities Branch

Past Papers Wiki

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை-உதவி மதிப்பீடு - 2026
අ.පො.ස. සාමාන්‍ය පෙළ විභාගය - උපකාරක තක්සේරුව - 2026
G. C. E. Ordinary Level Examination – Supportive Assesment -2026

புவியியல்	I, II
භූගෝල විද්‍යාව	I, II
Geography	I, II

மூன்று மணித்தியாலம்
පැය තුනයි
Three Hours

மேலதிக வாசிப்பு நேரம்	- 10 *நிமிடங்கள்*
අමතර කියවීම් කාලය	- මිනිත්තු 10 යි
Additional Reading Time	- 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும், விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

புவியியல்- I

அறிவுறுத்தல்

* **இவ்வினாத்தாள் 40 வினாக்களைக் கொண்டது.**
* **ஒவ்வொரு வினாவிற்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக எல்லா வினாக்களுக்கும் இவ்விடைத்தாளிலேயே விடை எழுதுக.**

- **01 தொடக்கம் 05 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குறியினுள்ளே உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக**

1. உயரத்தின் அடிப்படையில்.....மாறும் தன்மையை அடிப்படையாகக் கொண்டு வளிமண்டலமானது பல படைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
(அமுக்கம் / வெப்பநிலை / அடர்த்தி)

2. ஆரம்பகாலங்களில் இரும்புத்தாது, நிலக்கரி மற்றும் .....படிவுகள் அதிகமாகக் காணப்பட்ட நாடுகளிலேயே இரும்பு மற்றும் உருக்கு கைத்தொழிலானது அமைவிடம் பெற்றிருந்தது.
(சுண்ணக்கல்/ காரியம் / கணிய மணல்)

3. இலங்கையில் பெற்றோலியமானது.....நடவடிக்கைகளுக்காக அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. (வீட்டுப்பாவனை / கைத்தொழில் வியாபார / போக்குவரத்து)

4. ..... காட்டுத்தீ பரவலாக இடம்பெறும் தென்கிழக்காசிய நாடுகளில் ஒன்றாகும்.
(இந்தோனேசியா / அவுஸ்ரேலியா / சீனா)

5. ஈரவலயத்தில்..... மீற்றருக்கும் மேற்பட்ட உயர் நிலங்களில் மலைநாட்டு ஈரவலயக் காடுகள் பரவிக் காணப்படுகின்றன. (800M/ 1200 M / 1400 M)

- **6 தொடக்கம் 10 வரையுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து அவை சரியாயின் "ச" ஐயும், பிழையாயின் "பி" ஐயும் சுற்றி வட்டம் வரைக**

6. கீழ் மூடி மற்றும் வெளிக்கோளவகத்தை பிரிக்கின்ற எல்லையாக கூட்டன்பேர்க் எல்லை காணப்படுகிறது ச / பி
7. முழுமையாக சிதைவடைந்த தாய்ப்பாறை துண்டுகளும் மற்றும் சேதன பொருட்களும் B படையில் அதிகம் காணப்படுகின்றன. ச / பி
8. உலகின் மிகப்பெரிய நன்னீர் ஏரி தித்திக்கா ஏரியாகும். ச / பி
9. இலங்கையின் விவசாய தொழினுட்பப் பூங்கா கண்ணொருவையில் அமைந்துள்ளது. ச / பி
10. பூமியை நோக்கி வருகின்ற விண்கற்கள் இடைமண்டலத்திலேயே எரிந்து அழிந்து விடுகின்றன. ச / பி

- **11 தொடக்கம் 16 வரையுள்ள வினாக்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.**

11. பிலிப்பைன்ஸ் தீவுகளை அண்டிய மத்திய பசுபிக் சமுத்திர பகுதியில் உருவாகும் சூறாவளிகள் .....என அழைக்கப்படுகின்றன.
12. கல்லோயாவினை இடைமறித்து .....நீர்தேக்கம் அமைக்கப்பட்டுள்ளது.
13. தீமோர் கடலானது ..... சமுத்திரத்தின் ஒரு பகுதியாக அமைந்துள்ளது.
14. 2024 ஆம் ஆண்டு சனத்தொகை கணக்கெடுப்பின் படி இலங்கையின் சனத்தொகை கூடிய மாவட்டமாக ..... காணப்படுகிறது.
15. படங்களில் முழுமையான அம்புக்குறி ஒன்றுடன் காட்டப்படுவது ..... வடக்காகும்.
16. சிறப்பு தேர்ச்சி, தொழினுட்ப வளர்ச்சி, தொழிற்பிரிப்பு என்பன ..... கைத்தொழிலின் அடிப்படையாக காணப்படுகின்றன.

- **கீழே தரப்பட்டுள்ள வரைபினை பயன்படுத்தி 17 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக**



மூலம் : சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், 2026

17. வருடாந்த சனத்தொகை வளர்ச்சி வீதம் உயர்வாகக் காணப்படும் ஆண்டாக..... காணப்படுகிறது.
18. சனத்தொகை 5 மில்லியனுக்கும்,10 மில்லியனுக்கும் இடையில் பதிவான ஆண்டுகளின் எண்ணிக்கை.....
19. மிகக்குறைவான சனத்தொகை பதிவானது..... ஆண்டிலாகும்.
20. சனத்தொகை வளர்ச்சி வீதம் படிப்படியாக குறைவடைய தொடங்குவது..... ஆண்டின் பின்னராகும்.

- **21 – 25 வரையுள்ள வினாக்களில் 'அ' இ 'ஆ' மற்றும் "ஆ" என இரண்டு நிரல்கள் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலிலுள்ள தகவல்களின் ஒழுங்கிற்கேற்ப 'ஆ' நிரலிலுள்ள தகவல்கள் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளமையைக் காட்டும் சரியான விடைக்குரிய இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

21.

'அ' கண்டம்	'ஆ' மேட்டுநிலம்
1. தென்னமெரிக்கா	A.பி மேட்டுநிலம்
2. ஆபிரிக்கா	B. மொங்கோலிய
3. ஆசியா	C. மெக்சிக்கோ
	D. பிரேசில்

(1) A, D, C (2) B, D, A (3) D, A, B (4) D, B, A (.....)

22.

'அ' காலநிலை வலயம்	'ஆ' காலநிலை வகை
1. இடைவெப்ப வலயம்	A. துந்திரா
2. அயன வலயம்	B. மொன்சூன்
3. முனைவு வலயம்	C. ஆட்டிக்
	D. மத்தியதரை

(1) A, B, C (2) B, C, D (3) C, B, A (4) D, B, A (.....)

23.

'அ' மாவட்டம்	'ஆ' இரத்தினகல் அகழ்வு பிரதேசம்
1. மொனராகலை	A. பெல்மடுல்ல
2. இரத்தினப்புரி	B. ஒக்கம்பிடிய
3. மாத்தளை	C. எலஹர
	D. பலாங்கொடை

(1) A, D, B (2) B, A, C (3) B, D, A (4) C, D, B (.....)

24.

'அ' சக்தி மூலங்கள்	'ஆ' மின்வலு நிலையங்கள்
1. காற்று	A. யுகதனவி
2. நீர்	B. லக்விஜய
3. நிலக்கரி	C. தம்பபவனி
	D. விமலசுரேந்திர

(1) A, D, B (2) B, C, D (3) C, D, B (4) D, C, A (.....)

25.

'அ' பாறை வகை	'ஆ' பாறையின் பெயர்
1. தீப்பாறை	A. கப்ரோ
2. உருமாறிய	B. வைரம்
3. அடையல்	C. ஜிப்சம்
	D. காரியம்

(1) A, B, C (2) A, D, B (3) B, D, C (4) C, B, A (.....)

- **26 தொடக்கம் 37 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான/ மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

26. அயன மழைக்காடுகளில் அவதானிக்கக்கூடிய பண்பாக அமைவது.
(1). உயர் மட்ட உயிர் பல்வகைமை நிலவுதல் (2). தெளிவான படையமைப்பு காணப்படுவதில்லை
(3). இலையுதிர் தாவரங்கள் காணப்படுதல். (4). மெல்லிய,நேரான தண்டுகளைக் கொண்டது. (.....)

27. ஈரவலயத்தில் மாத்திரம் பரவிக் காணப்படும் மண்வகையாக கருதப்படுவது.
(1). செம்மஞ்சள் பொட்சோல் (2). செம்மஞ்சள் லற்றோசோல்
(3). செங்கபில செம்பூரான் (4). செங்கபில மண் (.....)

28. தற்காலத்தில் உலகின் 95% மான இயற்கை இறப்பரினை உற்பத்தி செய்வது.
(1). ஐரோப்பிய நாடுகள். (2). தென் மற்றும் தென்கிழக்காசிய நாடுகள்
(3). ஆபிரிக்க வலய நாடுகள். . (4). தென்னமெரிக்க நாடுகள் (.....)

29. ஜப்பான் தீவுகள் அமைந்துள்ள கவசதகடு.
(1). ஆபிரிக்கா (2). இந்தோ-அவுஸ்ரேலியா
(3). பசுபிக் (4). யுரேசியா (.....)

30. நீரை பயன்படுத்துகையில் தோன்றும் சிக்கலினை காட்டும் மிகச்சரியான விடை.
(1). மீன்பிடிக் கைத்தொழிலுக்கு பயன்படுத்துதல் (2). விவசாய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தல்

(3) வீண்விரயத்தை குறைத்தல் (4). உவர் தன்மைக்குள்ளாதல் (.....)

31. காரீயத்தினை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கைத்தொழிலொன்றினை சரியாக காட்டும் விடை.
(1). மசகெண்ணெய் (2). பிளாஸ்டிக் உற்பத்தி
(3). உலோக மூடுகை உற்பத்தி. (4). இலத்திரனியல் கைத்தொழில் (.....)

32. பின்வரும் குறிக்காட்டிகளை பயன்படுத்தி அளவிடக்கூடிய சுட்டெண்ணை குறிப்பிடுக.
- பிறப்பில் ஆயுள் எதிர்ப்பார்ப்பு
- எழுத்தறிவு
- கொள்வனவு சக்தி

(1). மனித வாழ்க்கைப் பண்பு சுட்டெண் (2). மனித அமுக்கச் சுட்டெண்
(3). மனித வறுமைச் சுட்டெண் (4). மனித அபிவிருத்திச் சுட்டெண் (.....)

33. 2000-2010 காலப்பகுதிகளில் இலத்திரனியல் கைத்தொழிலில் முன்னணியில் திகழ்ந்த கிழக்காசிய நாடு.
(1). ஜப்பான் (2). சீனா
(3). தாய்வான் (4). தென் கொரியா (.....)

34. காலநிலை மாற்றத்தினால் ஏற்படக்கூடிய இரு இயற்கை அனர்த்தங்களை குறிப்பிடும் விடை.
(1). மண்சரிவு மற்றும் புவிநடுக்கம் (2). தொற்று நோய்கள் மற்றும் சுனாமி
(3). எரிமலை வெடிப்பு மற்றும் வரட்சி (4). வரட்சி மற்றும் சூறாவளி (.....)

35. சிறு ஏற்றுமதி பயிர்கள் அதிகமாக பரம்பி காணப்படும் மாவட்டம்.
(1). கம்பஹா (2). புத்தளம்
(3). மாத்தளை (4). மாத்தறை (.....)

36. இடவிளக்கவியல் படங்களில் சிவப்பு நிற முக்கோணத்தில் காட்டப்படும் அம்சம்.
(1). வாடிவீடு (2). ஹோட்டல்
(3). சுற்றுலா விடுதி (4). திரிகோண கணித நிலையம் (.....)

37. இலங்கைக்கு அதிக அந்நிய செலாவணியை பெற்று தரும் கைத்தொழிலாக அமைவது.
(1). ஆடையுற்பத்தி (2). பெற்றோலிய உற்பத்தி
(3). மாணிக்ககல் அகழ்வு (4). இயந்திர சாதன உற்பத்தி (.....)

- **A,B,C,D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள ஒன்றுடனொன்று தொடர்புடைய தலைப்புக்களின் சோடிகளை நன்கு அவதானித்து 38 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

A - 1. மொத்த தேசிய உற்பத்தி
2. அந்நிய செலாவணி

B - 1. வள பாதுகாப்பு
2. நிலைத்திருக்கக்கூடிய அபிவீருத்தி

C - 1. நில சீரழிவு
2. விவசாய அறுவடை

D - 1. கல்வி
2. ஆயுள் எதிர்பார்ப்பு

38. முதலாவதன் அதிகரிப்பானது இரண்டாவதன் வீழ்ச்சிக்கு காரணமான தலைப்பு சோடி.
(1). A (2). B (3). C (4). D

39. இரண்டாவது நடைபெறுவதற்கு முதலாவது காரணமாக அமையும் தலைப்பு சோடி
(1). A (2). B (3). C (4). D

40. முதலாவதன் அதிகரிப்பிற்கு இரண்டாவது காரணமாக அமையும் தலைப்பு சோடி.
(1) A (2). B (3). C (4). D

❋❋❋❋

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
Ministry of Education, Higher Education & Vocational Education

61	T	I, II

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை-உதவி மதிப்பீடு - 2026
අ.පො.ස. සාමාන්‍ය පෙළ විභාගය - උපකාරක තක්සේරුව - 2026
G. C. E. Ordinary Level Examination – Supportive Assesment -2026

புவியியல்- II

* இவ்வினாத்தர்ள் I , II எனும் இரண்டு பகுதிகளைக் கொண்டது.
* பகுதி I இலுள்ள வினா கட்டாயமானது. அதில் (அ), (ஆ), (இ) ஆகிய மூன்று பிரிவுகளுக்கும் விடை எழுதுதல் வேண்டும்.
* பகுதி II இலிருந்து நான்கு வினாக்களுக்கு விடை எழுதல் வேண்டும்
* எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதல் வேண்டும்.

பகுதி-I

(அ) உமக்கு தரப்பட்டுள்ள 1:50000 அளவுதிட்டத்திலமைந்த இடவிளக்கப்படத்தின் பகுதியை நன்கு அவதானித்து, அதன் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. விடைகளை எழுதுவதற்கு உமக்கு வழங்கப்பட்டுள்ள தாளினைப் பயன்படுத்துக

- **இலக்கம் (i) தொடக்கம் (iv) வரையிலான வினாக்களுக்கான விடைகளை தெரிந்து புள்ளி கோட்டில் எழுதுக.**

i. இலக்கம் ① இனால் காட்டப்படும் இயற்கை தாவர வகை.
(கண்டல் / சதுப்பு நிலம் / பற்றை காடு) (01 புள்ளி)

ii. இலக்கம் ② இனால் காட்டப்படும் புகையிரத பாதையின் வகை
(ஒற்றை புகையிரத பாதை / இரட்டை புகையிரத பாதை / குறுகிய புகையிரத பாதை) (01 புள்ளி)

iii. A – A காட்டப்படும் அம்சம் யாது.
(சுவடு/ கூம்பு குன்று / கணவாய்) (01 புள்ளி)

iv. இலக்கம் ③ இனால் காட்டப்படும் தரைத்தோற்ற அம்சம் யாது
(சமவெளி / திரிகோண கணித நிலையம் / மேட்டு நிலம்) (01 புள்ளி)

v. நிருவாக எல்லையை வேறுபடுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ள பௌதீக அம்சம் யாது. (01 புள்ளி)

vi. சதுரம் ④ இல் அவதானிக்கக்கூடிய இரண்டு பண்பாட்டு அமசங்களை பெயரிடுக. (02 புள்ளிகள்)

vii. இலக்கம் ⑤ இனால் காட்டப்பட்டுள்ள இடத்தின் ஆள்கூற்று பெறுமானத்தினை தருக. (01 புள்ளி)

- **படப்பிரதேசம் தொடர்பான கூற்றுக்கள் (viii) மற்றும் (ix) வினாக்களில் தரப்பட்டடுள்ளன. கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து அவை சரியாயின் "ச" எனவும், பிழையாயின் "பி" எனவும் வினாக்களுக்கு எதிரே குறிப்பிடவும்.**

viii. X - Y வீதியின் நீளம் 3km மாத்திரமாகும். (01 புள்ளி)

ix. பிரதேசத்தில் ஆறுவகையான பயிர் வகைகள் பயிரிடப்பட்டுள்ளன. (01 புள்ளி)

(ஆ) உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உலகப்படத்தினை நன்கு அவதானித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும். விடையளிப்பதற்காக உலகப்படத்திற்கு அருகில் தரப்பட்டுள்ள சதுரங்களை பயன்படுத்தவும்.

- **இலக்கம் (i) தொடக்கம் (v) வரையான ஒவ்வொரு வினாவிற்கும் தரப்பட்டுள்ள ஆங்கில எழுத்துக்கள் மூன்றில் சரியான விடைக்குரிய எழுத்தினை தெரிவு செய்து அதனை படத்திற்கு அருகில் தரப்பட்டுள்ள சதுரத்தில் உரிய வினா இலக்கத்திற்கு நேரே உள்ள சதுரத்தில் எழுதவும்.**

i. சாட் ஏரி - Ⓐ, Ⓑ, Ⓒ
ii. ஓப் நதி - Ⓓ, Ⓔ, Ⓕ
iii. துருக்கி - Ⓖ, Ⓗ, Ⓘ
iv. பிஸ்கே குடா - Ⓛ, Ⓜ, Ⓝ
v. சென் ஹெலேன்ஸ் எரிமலை - Ⓟ, Ⓠ, Ⓡ

(05 புள்ளிகள்)

(இ) உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இலங்கை புறவுருவப் படத்தினை நன்றாக அவதானித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக. விடையளிப்பதற்காக படத்திற்கு அருகில் தரப்பட்டுள்ள சதுரங்களைப் பயன்படுத்தவும்.

- **இலக்கம் I தொடக்கம் V வரையான ஒவ்வொரு வினாவிற்கும் அருகில் தரப்பட்டுள்ள ஆங்கில எழுத்துக்கள் மூன்றில் சரியான விடைக்குரிய எழுத்தினை படத்திலிருந்து தெரிவு செய்து படத்திற்கு அருகில் தரப்பட்டுள்ள உரிய வினா இலக்கத்திற்கு நேரே தரப்பட்டுள்ள சதுரத்தில் எழுதவும்.**

i. தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிலையம் - Ⓐ, Ⓑ, Ⓒ
ii. சீகிரியா - Ⓓ, Ⓔ, Ⓕ
iii சிறு தென்னை முக்கோணம் - Ⓛ, Ⓜ, Ⓝ
iv. ஆணைவில்லு - Ⓟ, Ⓠ, Ⓡ
v. புல்மோட்டை - Ⓧ, Ⓨ, Ⓩ

(05 புள்ளிகள்)

பகுதி-II

01. (i). அருகில் உள்ள படத்தில் புவி மேற்பரப்பில் காணப்படும் நீரின் சதவீதங்கள் தரப்பட்டுள்ளன இதில் **A,B** ஆகியவற்றை சரியாக பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii). மேலே நீங்கள் குறிப்பிடப்பட்ட A யுடன் தொடர்புடைய மானிட நடவடிக்கைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii). நீரின் தரம் குறைவடைவதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)



03. (i). பெற்றோலிய இரசாயனக் கைத்தொழில் மூலம் மேற்கொள்ளப்படும் விவசாயத்துடன் தொடர்புடைய உற்பத்திகள் **இரண்டினைக்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii). பெற்றோலிய இரசாயனக் கைத்தொழிலின் பண்புகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii). மசகு எண்ணெய் விலை அதிகரிப்பானது இலங்கையின் பெற்றோலிய இரசாயனக் கைத்தொழிலில் ஏற்படுத்தும் பாதிப்புக்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றினை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

04. (i). இலங்கையில் காணப்படும் கடும் பாதுகாப்பிற்கு உட்பட்ட இயற்கை ஒதுக்குகள் **இரண்டினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii).(a). இலங்கையின் அரை வறள் வலயத்தில் காணக்கூடிய காட்டு வகை எது?

(b). மேற்குறிப்பிட்ட காட்டு வகையின் சிறப்பம்சங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii). இலங்கையில் வன சீவராசிகளை பாதுகாக்க மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு,அவற்றை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் பிரச்சினைகள் **இரண்டினை** சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

05. (i). கீழே தரப்பட்டுள்ள கைத்தொழில்களுடன் தொடர்புடைய பிரதேங்களை A,B ஒழுங்கு முறையில் பெயரிடுக.
(a). பிரம்பு உற்பத்தி
(b).கைத்தறி நெசவு (02 புள்ளிகள்)

(ii). குடிசைக் கைத்தொழிலின் **மூன்று** முக்கிய பண்புகளை குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii). இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு குடிசைக் கைத்தொழில்கள் பங்களிப்புச் செய்யும் **மூன்று** விதத்தினை உதாரணங்கள் மூலம் விளக்குக. (05 புள்ளிகள்)

06. (i). இலங்கையில் பாரம்பரிய இறப்பர் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் மாவட்டங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii). இலங்கையின் இறப்பர் பயிர்ச்செய்கையில் தாக்கம் செலுத்தும் மானிட காரணிகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii). இலங்கையின் இறப்பர் பயிர்ச்செய்கையுடன் தொடர்புடைய **மூன்று** பிரச்சினைகளை குறிப்பிட்டு, அவற்றுக்கான தீர்வுகள் **இரண்டினை** சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

07. (i). பௌதீக அனர்த்தம் அல்லாத அனர்த்தங்கள் **இரண்டினை** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii). நிலச்சரிவொன்றினை முன்கூட்டியே அறிந்து கொள்ளக்கூடிய **மூன்று** அறிகுறிகளை குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii). நிலச்சரிவு இடரினை இழிவளவாக்குவதற்கான நடவடிக்கைகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

08. (i). (a). தென் அமெரிக்கா கண்டத்தின் சனத்தொகை கூடிய நாட்டினையும்,
(b). ஆபிரிக்க கண்டத்தின் சனத்தொகை கூடிய நாட்டினையும்,
பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii). உலகில் சனத்தொகை அடர்த்தி கூடிய பிரதேசங்களில் அவதானிக்க கூடிய பொதுவான பண்புகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii). அண்மைக்காலமாக குறைவடைந்து செல்லும் இலங்கையின் சனத்தொகை காரணமாக எதிர்காலத்தில் ஏற்பட கூடிய **மூன்று** பாதிப்புக்களை குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றினை சுருக்கமாக விளக்குக.(03 புள்ளிகள்)

❋❋❋❋

PAST PAPERS WIKI

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education & Vocational Education

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය - 2026
கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2026
General Certificate of Education (Ordinary Level) Examination - 2026

භූගෝල විද්‍යාව	**I, II**
புவியியல்	**I, II**
Geography	**I, II**

විභාග අංකය:.....

1· (ඇ) / (அ) / (a)

i. ----------

ii. ----------

iii. ----------

iv. ----------

v. ----------

vi. ----------

---

vii. ----------

viii. ----------

ix. ----------

/10

(ஆ) / (ஆ) / (b)



(i) ☐

(ii) ☐

(iii) ☐

(iv) ☐

(v) ☐

☐/5

(இ) / (இ) / (c)



(i) ☐

(ii) ☐

(iii) ☐

(iv) ☐

(v) ☐

☐/5

1. (அ) (அ) (a) $\frac{}{10}$ (ஆ) (அ) (b) $\frac{}{5}$ (இ) (இ) (c) $\frac{}{5}$ = $\frac{}{20}$

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சகம்
Ministry of Education, Higher Education & Vocational Education

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය - 2026
கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2026
General Certificate of Education (Ordinary Level) Examination - 2026



අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
Minister of Education, Higher Education and Vocational Education
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය) විභාගය - 2026
கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2026
General Certificate of Education (Ordinary Level) Examination - 2026

உதவி மதிப்பீடு - விடைப்பத்திரம்
උපකාරක තක්සේරුව - පිළිතුරු පත්‍රය
Supportive Assessment - Answer Sheet

தமிழ் மொழி மூலம்
දෙමළ මාධ්‍ය
Tamil Medium

භූගෝල විද්‍යාව
Geography
புவியியல்



උත්තර පත්‍රය - விடைப்பத்திரம் - Answer Sheet

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
தேசிய மொழிகள் மற்றும் சமூக விஞ்ஞான கிளை
අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
ජාතික භාෂා හා මානව ශාස්ත්‍ර ශාඛාව
Ministry of Education, Higher Education and Vocational Education
National Languages and Humanities Branch

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

தேசிய மொழிகள் மற்றும் சமூக விஞ்ஞான கிளை

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை
உதவி மதிப்பீடு - 2026 விடைப்பத்திரம்

புவியியல்

அறிவுறுத்தல்

* **இவ்வினாத்தாள் 40 வினாக்களைக் கொண்டது.**
* ஒவ்வொரு வினாவிற்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக எல்லா வினாக்களுக்கும் இவ்விடைத்தாளிலேயே விடை எழுதுக. *

- **01 தொடக்கம் 05 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குறியினுள்ளே உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக**

1. உயரத்தின் அடிப்படையில் **வெப்பநிலை** .....மாறும் தன்மையை அடிப்படையாகக் கொண்டு வளிமண்டலமானது பல படைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
(அமுக்கம் / வெப்பநிலை / அடர்த்தி)

2. ஆரம்பகாலங்களில் இரும்புத்தாது, நிலக்கரி மற்றும் .....**சுண்ணக்கல்**.....படிவுகள் அதிகமாகக் காணப்பட்ட நாடுகளிலேயே இரும்பு மற்றும் உருக்கு கைத்தொழிலானது அமைவிடம் பெற்றிருந்தது.
(சுண்ணக்கல்/ காரியம் / கணிய மணல்)

3. இலங்கையில் பெற்றோலியமானது.....**போக்குவரத்து**.....நடவடிக்கைகளுக்காக அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. (வீட்டுப்பாவனை / கைத்தொழில் வியாபார / போக்குவரத்து)

4. .....**இந்தோனேசியா**..... காட்டுத்தீ பரவலாக இடம்பெறும் தென்கிழக்காசிய நாடுகளில் ஒன்றாகும்.
(இந்தோனேசியா / அவுஸ்ரேலியா / சீனா)

5. ஈரவலயத்தில்.....**1200 M**..... மீற்றருக்கும் மேற்பட்ட உயர் நிலங்களில் மலைநாட்டு ஈரவலயக் காடுகள் பரவிக் காணப்படுகின்றன. (800M/ 1200 M / 1400 M)

- **6 தொடக்கம் 10 வரையுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து அவை சரியாயின் "ச" ஐயும், பிழையாயின் "பி" ஐயும் சுற்றி வட்டம் வரைக**

6. கீழ் மூடி மற்றும் வெளிக்கோளவகத்தை பிரிக்கின்ற எல்லையாக கூட்டன்பேர்க் எல்லை காணப்படுகிறது (ச) / பி
7. முழுமையாக சிதைவடைந்த தாய்ப்பாறை துண்டுகளும் மற்றும் சேதன பொருட்களும் B படையில் அதிகம் காணப்படுகின்றன. ச / (பி)
8. உலகின் மிகப்பெரிய நன்னீர் ஏரி தித்திக்கா ஏரியாகும். ச / (பி)
9. இலங்கையின் விவசாய தொழினுட்பப் பூங்கா கண்ணொருவையில் அமைந்துள்ளது. (ச) / பி
10. பூமியை நோக்கி வருகின்ற விண்கற்கள் இடைமண்டலத்திலேயே எரிந்து அழிந்து விடுகின்றன. ச / (பி)

- **11 தொடக்கம் 16 வரையுள்ள வினாக்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.**

11. பிலிப்பைன்ஸ் தீவுகளை அண்டிய மத்திய பசுபிக் சமுத்திர பகுதியில் உருவாகும் சூறாவளிகள் .....**பாகியஸ்**.....என அழைக்கப்படுகின்றன.
12. கல்லோயாவினை இடைமறித்து .....**இங்கினியாகலை**.....நீர்தேக்கம் அமைக்கப்பட்டுள்ளது.
13. தீமோர் கடலானது .....**இந்து**..... சமுத்திரத்தின் ஒரு பகுதியாக அமைந்துள்ளது.
14. 2024 ஆம் ஆண்டு சனத்தொகை கணக்கெடுப்பின் படி இலங்கையின் சனத்தொகை கூடிய மாவட்டமாக .....**கம்பகா**..... காணப்படுகிறது.

15. படங்களில் முழுமையான அம்புக்குறி ஒன்றுடன் காட்டப்படுவது .....அளியடைப்பு..... வடக்காகும்.

16. சிறப்பு தேர்ச்சி, தொழினுட்ப வளர்ச்சி, தொழிற்பிரிப்பு என்பன .....பொருத்தும்..... கைத்தொழிலின் அடிப்படையாக காணப்படுகின்றன.

- **கீழே தரப்பட்டுள்ள வரைபினை பயன்படுத்தி 17 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக**



மூலம் : சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், 2026

17. வருடாந்த சனத்தொகை வளர்ச்சி வீதம் உயர்வாகக் காணப்படும் ஆண்டாக.....1953..... காணப்படுகிறது.

18. சனத்தொகை 5 மில்லியனுக்கும்,10 மில்லியனுக்கும் இடையில் பதிவான ஆண்டுகளின் எண்ணிக்கை.....மூன்று/ 03.....

19. மிகக்குறைவான சனத்தொகை பதிவானது.....1871..... ஆண்டிலாகும்.

20. சனத்தொகை வளர்ச்சி வீதம் படிப்படியாக குறைவடைய தொடங்குவது.....1953..... ஆண்டின் பின்னராகும்.

- **21 – 25 வரையுள்ள வினாக்களில் 'அ' இ 'ஆ' மற்றும் "ஆ" என இரண்டு நிரல்கள் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலிலுள்ள தகவல்களின் ஒழுங்கிற்கேற்ப 'ஆ' நிரலிலுள்ள தகவல்கள் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளமையைக் காட்டும் சரியான விடைக்குரிய இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

21.

'அ' கண்டம்	'ஆ' மேட்டுநிலம்
1. தென்னமெரிக்கா	A.பி மேட்டுநிலம்
2. ஆபிரிக்கா	B. மொங்கோலிய
3. ஆசியா	C. மெக்சிக்கோ
	D. பிரேசில்

(1) A, D, C (2) B, D, A (3) D, A, B (4) D, B, A (.....3.....)

22.

'அ' காலநிலை வலயம்	'ஆ' காலநிலை வகை
1. இடைவெப்ப வலயம்	A. துந்திரா
2. அயன வலயம்	B. மொன்சூன்
3. முனைவு வலயம்	C. ஆட்டிக்
	D. மத்தியதரை

(1) A, B, C (2) B, C, D (3) C, B, A (4) D, B, A (.....4.....)

23.

'அ' மாவட்டம்	'ஆ' இரத்தினகல் அகழ்வு பிரதேசம்
1. மொனராகலை	A. பெல்மடுல்ல
2. இரத்தினப்புரி	B. ஒக்கம்பிடிய
3. மாத்தளை	C. எலஹர
	D. பலாங்கொடை

(1) A, D, B (2) B, A, C (3) B, D, A (4) C, D, B (2)

24.

'அ' சக்தி மூலங்கள்	'ஆ' மின்வலு நிலையங்கள்
1. காற்று	A. யுகதனவி
2. நீர்	B. லக்விஜய
3. நிலக்கரி	C. தம்பபவனி
	D. விமலசுரேந்திர

(1) A, D, B (2) B, C, D (3) C, D, B (4) D, C, A (3)

25.

'அ' பாறை வகை	'ஆ' பாறையின் பெயர்
1. தீப்பாறை	A. கப்ரோ
2. உருமாறிய	B. வைரம்
3. அடையல்	C. ஜிப்சம்
	D. காரியம்

(1) A, B, C (2) A, D, B (3) B, D, C (4) C, B, A (1)

- **26 தொடக்கம் 37 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான/ மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

26. அயன மழைக்காடுகளில் அவதானிக்கக்கூடிய பண்பாக அமைவது.
(1). உயர் மட்ட உயிர் பல்வகைமை நிலவுதல் (2). தெளிவான படையமைப்பு காணப்படுவதில்லை
(3). இலையுதிர் தாவரங்கள் காணப்படுதல். (4). மெல்லிய,நேரான தண்டுகளைக் கொண்டது. (1)

27. ஈரவலயத்தில் மாத்திரம் பரவிக் காணப்படும் மண்வகையாக கருதப்படுவது.
(1). செம்மஞ்சள் பொட்சோல் (2). செம்மஞ்சள் லற்றசோல்
(3). செங்கபில செம்பூரான் (4). செங்கபில மண் (3)

28. தற்காலத்தில் உலகின் 95% மான இயற்கை இறப்பரினை உற்பத்தியை செய்வது.
(1). ஐரோப்பிய நாடுகள். (2). தென் மற்றும் தென்கிழக்காசிய நாடுகள்
(3). ஆபிரிக்க வலய நாடுகள். . (4). தென்னமெரிக்க நாடுகள் (2)

29. ஜப்பான் தீவுகள் அமைந்துள்ள கவசதகடு.
(1). ஆபிரிக்கா (2). இந்தோ-அவுஸ்ரேலியா
(3). பசுபிக் (4). யுரேசியா (4)

30. நீரை பயன்படுத்துகையில் தோன்றும் சிக்கலினை காட்டும் மிகச்சரியான விடை.
(1). மீன்பிடிக் கைத்தொழிலுக்கு பயன்படுத்துதல் (2) விவசாய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தல்
(3). வீண்விரயத்தை குறைத்தல் (4). உவர் தன்மைக்குள்ளாதல் (4)

31. காரீயத்தினை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கைத்தொழிலொன்றினை சரியாக காட்டும் விடை.
(1). மசகெண்ணெய் (2). பிளாஸ்டிக் உற்பத்தி
(3). உலோக மூடுகை உற்பத்தி. (4). இலத்திரனியல் கைத்தொழில் (1)

32. பின்வரும் குறிக்காட்டிகளை பயன்படுத்தி அளவிடக்கூடிய சுட்டெண்ணை குறிப்பிடுக.
- பிறப்பில் ஆயுள் எதிர்ப்பார்ப்பு
- எழுத்தறிவு
- கொள்வனவு சக்தி

(1). மனித வாழ்க்கைப் பண்பு சுட்டெண் (2). மனித அமுக்கச் சுட்டெண்
(3). மனித வறுமைச் சுட்டெண் (4). மனித அபிவிருத்திச் சுட்டெண் (..4..)

33. 2000-2010 காலப்பகுதிகளில் இலத்திரனியல் கைத்தொழிலில் முன்னணியில் திகழ்ந்த கிழக்காசிய நாடு.
(1). ஜப்பான் (2). சீனா
(3). தாய்வான் (4). தென் கொரியா (..2..)

34. காலநிலை மாற்றத்தினால் ஏற்படக்கூடிய இரு இயற்கை அனர்த்தங்களை குறிப்பிடும் விடை.
(1). மண்சரிவு மற்றும் புவிநடுக்கம் (2). தொற்று நோய்கள் மற்றும் சுனாமி
(3). எரிமலை வெடிப்பு மற்றும் வரட்சி (4). வரட்சி மற்றும் சூறாவளி (..4..)

35. சிறு ஏற்றுமதி பயிர்கள் அதிகமாக பரம்பி காணப்படும் மாவட்டம்.
(1). கம்பஹா (2). புத்தளம்
(3). மாத்தளை (4). மாத்தறை (..3..)

36. இடவிளக்கவியல் படங்களில் சிவப்பு நிற முக்கோணத்தில் காட்டப்படும் அம்சம்.
(1). வாடிவீடு (2). ஹோட்டல்
(3). சுற்றுலா விடுதி (4). திரிகோண கணித நிலையம் (..2..)

37. இலங்கைக்கு அதிக அந்நிய செலாவணியை பெற்று தரும் கைத்தொழிலாக அமைவது.
(1). ஆடையுற்பத்தி (2). பெற்றோலிய உற்பத்தி
(3). மாணிக்ககல் அகழ்வு (4). இயந்திர சாதன உற்பத்தி (..1..)

- **A,B,C,D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள ஒன்றுடனொன்று தொடர்புடைய தலைப்புக்களின் சோடிகளை நன்கு அவதானித்து 38 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

A - 1. மொத்த தேசிய உற்பத்தி
2. அந்நிய செலாவணி

B - 1. வள பாதுகாப்பு
2. நிலைத்திருக்கக்கூடிய அபிவீருத்தி

C - 1. நில சீரழிவு
2. விவசாய அறுவடை

D - 1. கல்வி
2. ஆயுள் எதிர்பார்ப்பு

38. முதலாவதன் அதிகரிப்பானது இரண்டாவதன் வீழ்ச்சிக்கு காரணமான தலைப்பு சோடி.
(1). A (2). B (3). C (4). D (..3..)

39. இரண்டாவது நடைபெறுவதற்கு முதலாவது காரணமாக அமையும் தலைப்பு சோடி
(1). A (2). B (3). C (4). D (..2..)

40. முதலாவதன் அதிகரிப்பிற்கு இரண்டாவது காரணமாக அமையும் தலைப்பு சோடி.
(1) A (2). B (3). C (4). D (..1..)

❋❋❋❋

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
Ministry of Education, Higher Education & Vocational Education

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை-உதவி மதிப்பீடு - 2026
අ.පො.ස. සාමාන්‍ය පෙළ විභාගය - උපකාරක තක්සේරුව - 2026

புவியியல்- II

* இவ்வினாத்தாள் I , II எனும் இரண்டு பகுதிகளைக் கொண்டது.
* பகுதி I இலுள்ள வினா கட்டாயமானது. அதில் (அ), (ஆ), (இ) ஆகிய மூன்று பிரிவுகளுக்கும் விடை எழுதுதல் வேண்டும்.
* பகுதி II இலிருந்து நான்கு வினாக்களுக்கு விடை எழுதல் வேண்டும்
* எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதல் வேண்டும்.

பகுதி-I

(அ) உமக்கு தரப்பட்டுள்ள 1:50000 அளவுதிட்டத்திலமைந்த இடவிளக்கப்படத்தின் பகுதியை நன்கு அவதானித்து, அதன் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. விடைகளை எழுதுவதற்கு உமக்கு வழங்கப்பட்டுள்ள தாளினைப் பயன்படுத்துக

- **இலக்கம் (i) தொடக்கம் (iv) வரையிலான வினாக்களுக்கான விடைகளை தெரிந்து புள்ளி கோட்டில் எழுதுக.**

i. இலக்கம் ① இனால் காட்டப்படும் இயற்கை தாவர வகை.
(கண்டல் / சதுப்பு நிலம் / பற்றை காடு) (01 புள்ளி)

ii. இலக்கம் ② இனால் காட்டப்படும் புகையிரத பாதையின் வகை
(ஒற்றை புகையிரத பாதை / இரட்டை புகையிரத பாதை / குறுகிய புகையிரத பாதை) (01 புள்ளி)

iii. A – A காட்டப்படும் அம்சம் யாது.
(சுவடு/ கூம்பு குன்று / கணவாய்) (01 புள்ளி)

iv. இலக்கம் ③ இனால் காட்டப்படும் தரைத்தோற்ற அம்சம் யாது
(சமவெளி / திரிகோண கணித நிலையம் / மேட்டு நிலம்) (01 புள்ளி)

v. நிருவாக எல்லையை வேறுபடுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ள பௌதீக அம்சம் யாது. (01 புள்ளி)

vi. சதுரம் ④ இல் அவதானிக்கக்கூடிய இரண்டு பண்பாட்டு அமசங்களை பெயரிடுக. (02 புள்ளிகள்)

vii. இலக்கம் ⑤ இனால் காட்டப்பட்டுள்ள இடத்தின் ஆள்கூற்று பெறுமானத்தினை தருக. (01 புள்ளி)

- **படப்பிரதேசம் தொடர்பான கூற்றுக்கள் (viii) மற்றும் (ix) வினாக்களில் தரப்பட்டடுள்ளன. கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து அவை சரியாயின் "ச" எனவும், பிழையாயின் "பி" எனவும் வினாக்களுக்கு எதிரே குறிப்பிடவும்.**

viii. X - Y வீதியின் நீளம் 3km மாத்திரமாகும். (01 புள்ளி)

ix. பிரதேசத்தில் ஆறுவகையான பயிர் வகைகள் பயிரிடப்பட்டுள்ளன. (01 புள்ளி)

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Minister of Education, Higher Education and Vocational Education

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය - උපකාරක තක්සේරුව - **2026**
கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - பயிற்சி வினாத்தாள - 2026
General Certificate Examination (Ordinary Level) Examination – Supportive Assessment - 2026

புவியியல்	**II**
භූගෝල විද්‍යාව	**II**
Geography	**II**

பரீட்சை எண்:.....

1· (ඇ) / (அ) / (a)

i.	**சேற்று நிலம்**	1
ii.	**ஓற்றை புகையிரத பாதை**	1
iii.	**கணவாய்**	1
iv.	**சமவெளி**	1
v.	**நதி / கங்கை**	1
vi.	**பாடசாலை / பௌத்த கோவில் / சிறு வீதி /வீட்டுத்தோட்டம் /ஜீப்வண்டி பாதை/ நடைபாதை/ தென்னை பயிர்செய்கை/ நெற் பயிர்ச்செய்கை (இவற்றுள் இரண்டு)**	1
vii.	**தென் அகலாங்கு 6^0 55'**	1
viii.	**பிழை**	1
ix.	**பிழை**	1

10/10

(ஆ)உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உலகப்படத்தினை நன்கு அவதானித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும். விடையளிப்பதற்காக உலகப்படத்திற்கு அருகில் தரப்பட்டுள்ள சதுரங்களை பயன்படுத்தவும்.

- **இலக்கம் (i) தொடக்கம் (v) வரையான ஒவ்வொரு வினாவிற்கும் தரப்பட்டுள்ள ஆங்கில எழுத்துக்கள் மூன்றில் சரியான விடைக்குரிய எழுத்தினை தெரிவு செய்து அதனை படத்திற்கு அருகில் தரப்பட்டுள்ள சதுரத்தில் உரிய வினா இலக்கத்திற்கு நேரே உள்ள சதுரத்தில் எழுதவும்.**

i. சாட் ஏரி - Ⓐ, Ⓑ, Ⓒ
ii. ஓப் நதி - Ⓓ, Ⓔ, Ⓕ
iii. துருக்கி - Ⓖ, Ⓗ, Ⓘ
iv. பிஸ்கே குடா - Ⓛ, Ⓜ, Ⓝ
v. சென் ஹெலேன்ஸ் எரிமலை - Ⓟ, Ⓠ, Ⓡ

(05 புள்ளிகள்)

(இ) உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இலங்கை புறவுருவப் படத்தினை நன்றாக அவதானித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக. விடையளிப்பதற்காக படத்திற்கு அருகில் தரப்பட்டுள்ள சதுரங்களைப் பயன்படுத்தவும்.

- **இலக்கம் I தொடக்கம் V வரையான ஒவ்வொரு வினாவிற்கும் அருகில் தரப்பட்டுள்ள ஆங்கில எழுத்துக்கள் மூன்றில் சரியான விடைக்குரிய எழுத்தினை படத்திலிருந்து தெரிவு செய்து படத்திற்கு அருகில் தரப்பட்டுள்ள உரிய வினா இலக்கத்திற்கு நேரே தரப்பட்டுள்ள சதுரத்தில் எழுதவும்.**

i. தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிலையம் - Ⓐ, Ⓑ, Ⓒ
ii. சீகிரியா - Ⓓ, Ⓔ, Ⓕ
iii சிறு தென்னை முக்கோணம் - Ⓛ, Ⓜ, Ⓝ
iv. ஆணைவில்லு - Ⓟ, Ⓠ, Ⓡ
v. புல்மோட்டை - Ⓧ, Ⓨ, Ⓩ

(05 புள்ளிகள்)

(ஈ) / (ஆ) / (b)



(i) A

(ii) F

(iii) H

(iv) N

(v) Q

5/5

(ஞ) / (இ) / (c)



(i) C

(ii) F

(iii) M

(iv) Q

(v) X

5/5

1. (ஈ) (அ) (a) $\frac{10}{10}$ (ஈ) (அ) (b) $\frac{5}{5}$ (ஞ) (இ) (c) $\frac{5}{5}$ $= \frac{20}{20}$

பகுதி-II

02. (i).அருகில் உள்ள படத்தில் புவி மேற்பரப்பில் காணப்படும் நீரின் சதவீதங்கள் தரப்பட்டுள்ளன. இதில் **A,B** ஆகியவற்றை சரியாக பெயரிடுக.

A - மண் நீர்

B - நதி நீர்



(சரியாக பெயரிட்டிருப்பின் 01 புள்ளி வீதம் - 02 புள்ளிகள்)

(ii). மேலே நீங்கள் குறிப்பிடப்பட்ட A யுடன் தொடர்புடைய மானிட நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

- மீன்பிடி கைத்தொழில் - மீன் மற்றும் ஏனைய கடலுணவுகளை பெற்றுக் கொள்ளல்.
- விவசாயம் - நீர்பாசனத்திற்காக பயன்படுத்துதல்.
- குடிநீர் மற்றும் வீட்டு தேவைகள் - மக்களுக்கு தேவையான நீரை பெற்றுக் கொள்ளல்.
- கைத்தொழில் நடவடிக்கைகளுக்கான நீரை பெற்றுக்கொள்ளல் - படகு நிர்மாணம்
- உல்லாச பிரயாண கைத்தொழில் - படகு ஓட்டம் , மீன் பிடி
- நீர் மூலமான உற்பத்திகள் - இறால் வளர்ப்பு, மீன் வளர்ப்பு
- போக்குவரத்து நடவடிக்கைகள் - கப்பல், படகு
- நீர்மின்சாரம்பெற்றுக் கொள்ளல்.

(இவற்றுள் ஏதாவது மூன்று மானிட நடவடிக்கைகளை சரியாக குறிப்பிட்டிருப்பின் 03 புள்ளிகள்)

(iii). நீரின் தரம் குறைவடைவதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை சுருக்கமாக விளக்குக.

- சுத்தமான குடிநீரை பெற்றுக் கொள்ள முடியாமை
- பல்வேறு தொற்று நோய்கள் ஏற்படல்.
- நீர்வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படல்
- நீர் சுத்திகரிப்பிற்கு அதிக செலவு ஏற்படல்
- விவசாயம் பாதிக்கப்படல்
- சூழல் தொகுதிகள் பாதிக்கப்படல்/அழிவடைதல்
- நீருக்கான கேள்வி அதிகரித்தல்.

(இவற்றுள் ஏதாவது பாதிப்புகள் மூன்றினை குறிப்பிட 1 புள்ளி வீதம் - 03 புள்ளிகள் +அவற்றுள் ஒன்றினை விளக்கியிருப்பின் 02 புள்ளிகள் = மொத்தம் 05 புள்ளிகள்)

03. (i). பெற்றோலிய இரசாயனக் கைத்தொழில் மூலம் மேற்கொள்ளப்படும் விவசாயத்துடன் தொடர்புடைய உற்பத்திகள் இரண்டினைக் பெயரிடுக.

- களைநாசினி
- இரசாயன உரம்
- கிருமி நாசினி
- பிளாஸ்டிக் உபகரணங்கள் (குழாய், ...)

(இவற்றுள் ஏதாவது உற்பத்திகள் இரண்டினை பெயரிட்டிருப்பின் 02 புள்ளிகள்)

(ii). பெற்றோலிய இரசாயனக் கைத்தொழிலின் பண்புகள் மூன்றினைக் குறிப்பிடுக.

- இறக்குமதி செயய்ப்படும் மசகு எண்ணெய் மற்றும் இயற்கை வாயுவை நம்பியே இத்துறை தங்கியுள்ளமை
- புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தல்
- மூலதன செறிவு மிக்க தொழிலாக காணப்படல்
- சந்தை போட்டி
- பாரியளவில் உற்பத்தி செய்யப்படுதல்.
- ஏனைய கைத்தொழில்கள் யாவும் இதில் தங்கியுள்ளமை.
- வெளியேற்றப்படும் இராசயனக் கழிவினால் சூழல் மாசடைதல்.

(இவற்றுள் ஏதாவது மூன்று பண்புகளை சரியாக குறிப்பிட்டிருப்பின் 03 புள்ளிகள்)

(iii). மசகு எண்ணெய் விலை அதிகரிப்பானது இலங்கையின் பெற்றோலிய இரசாயனக் கைத்தொழில் ஏற்படுத்தும் பாதிப்புக்கள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை சுருக்கமாக விளக்குக.

- உற்பத்தி செலவு அதிகரித்தமை,பொருட்களின் விலை அதிகரித்தல்.
- மசகு எண்ணெய் இறக்குமதிக்கு அதிக செலவு ஏற்படுகின்றமை
- அந்நிய செலாவணி பிரச்சினை இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளமை.
- விவசாயம் மற்றும் ஏனைய துறைகளுக்கு மறைமுக பாதிப்புக்கள் ஏற்படல்
- உற்பத்தியளவு குறைவடைதல்.

(இவற்றுள் ஏதாவது பாதிப்புகள் மூன்றினை குறிப்பிட 1 புள்ளி வீதம் - 03 புள்ளிகள் + அவற்றுள் ஒன்றினை விளக்கியிருப்பின் 02 புள்ளிகள் = மொத்தம் 05 புள்ளிகள்)

04. (i). இலங்கையில் காணப்படும் கடும் பாதுகாப்பிற்கு உட்பட்ட இயற்கை ஒதுக்குகள் இரண்டினைக் குறிப்பிடுக.

- ஹக்கல
- ரிட்டிகல
- யால

(இவற்றுள் ஏதாவது இரண்டினை குறிப்பிட்டிருப்பின் 02 புள்ளிகள்)

(ii). (a). இலங்கையின் அரை வறள் வலயத்தில் காணக்கூடிய காட்டு வகை எது

முட்புதர்களும் பற்றைக்காடுகளும்

(b). மேற்குறிப்பிட்ட காட்டு வகையின் சிறப்பம்சங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

- இலங்கையின் தென் கிழக்கு மற்றும் வட மேற்கு பிரதேசங்களில் பரந்து காணப்படுகின்றமை.
- சராசரி வெப்பநிலை 27^0 C க்கும் அதிகமான வெப்பம் நிலவுவதால் வரட்சிக்கு தாக்குப்பிடிக்கக் கூடிய தாவரங்கள் காணப்படுதல்.
- முட்கள் கொண்ட தாவரங்களில் இலைகள் கூராகவும், தடிப்பாகவும் காணப்படும்.
- பலு,வீரை,எரமினியா, ஆகிய மரங்களை காணலாம்.
- வரண்ட வலயத்துக்கு இசைவாக்கமடைந்த தாவரங்கள்.

(இவற்றுள் ஏதாவது மூன்று பண்புகளை சரியாக குறிப்பிட்டிருப்பின் 03 புள்ளிகள்)

(iii). இலங்கையில் வன சீவராசிகளை பாதுகாக்க மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிட்டு,அவற்றை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் பிரச்சினைகள் இரண்டினை சுருக்கமாக விளக்குக.

வன சீவராசி பாதுகாப்பு நடவடிக்கைகள்	**நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் பிரச்சினைகள்**
தேசிய வன ஒதுக்குகள், சரணாலயங்கள் அமைத்தல்	- பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களை ஆக்கிரமித்தல் - அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக காடுகளை அழித்தல் - பாதுகாப்பு எல்லைகளை பாதுகாப்பதில் சவால்
வனசீவராசிகள் மற்றும் தாவரங்களை பாதுகாக்கும் சட்டங்களை அமுல்படுத்ததல்	- சட்ட விரோதமாக வேட்டையாடுதல் மற்றும் வியாபாரம் - சட்டங்களை அமுல்படுத்தும் அலுவலர்களுக்கான பற்றாக்குறை
அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் விலங்குகள் தாவரங்களை பாதுகாக்க விசேட நடைமுறைகளை மேற்கொள்ளுதல்.	- வாழிடங்களை இழத்தல் - உணவு பற்றாக்குறை - மரபணு பல்வகைமை குறைவடைதல்
சரணாலயங்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களை பாதுகாத்தல்	- போதுமானளவு நிதி மற்றும் மனித வளம் இன்மை - பரந்த பகுதிகளை கண்காணிப்பதில் சிக்கல் - சட்ட விரோத செயற்பாடுகள்
மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.	- மக்களின் பங்களிப்பு குறைவடைதல் - பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வின்மை
தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களின் துணையுடன் வனபாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.	- நிதியை பெறுவதில் சிக்கல் - நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பில் சிக்கல்.
மனித-யானை மோதலை குறைப்பதற்கான வேலைதிட்டங்களை முன்னெடுத்தல்.	- யானை- மனித மோதலைக் குறைப்பதில் ஏற்படும் சிரமங்கள் - குடியிருப்புகள் மற்றும் பயிர் நிலங்கள் வாழிடங்களுக்கருகாமையில் அமைதல் - இழப்பீடு மற்றும் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள்

(இவற்றுள் ஏதாவது நடவடிக்கைகள் மூன்றினை குறிப்பிட 1 புள்ளி வீதம் - 03 புள்ளிகள் + பிரச்சினைகள் இரண்டினை சுருக்கமாக விளக்கியிருப்பின் 02 புள்ளிகள் = மொத்தம் 05 புள்ளிகள்)

05. கீழே தரப்பட்டுள்ள கைத்தொழில்களுடன் தொடர்புடைய பிரதேங்களை A,B ஒழுங்கு முறையில் பெயரிடுக.

(a). பிரம்பு உற்பத்தி - ரதாவடுன்ன,வேவெல்தெனிய
(b).கைத்தறி நெசவு - காலி,மாத்தறை,வெலிகம

(சரியாக பெயரிட்டிருப்பின் 01 புள்ளி வீதம் - 02 புள்ளிகள்)

(ii). குடிசைக் கைத்தொழிலின் மூன்று முக்கிய பண்புகளை குறிப்பிடுக.

- பெரும்பாலும் குடும்ப உழைப்பாக காணப்படுதல்
- பாரம்பரிய அறிவினை பயன்படுத்தல்.
- பெரும்பாலும் வீட்டினுள்ளேயோ அல்லது அருகிலோ நடாத்தப்படுதல்.
- சிறியளவில் செய்யப்படுதல்.
- சிறிய வகை இயந்திரங்கள் மற்றும் எளிய மின்னியந்திரங்களை பயன்படுத்துதல்.

(,tw;Ws; ஏதாவது மூன்று பண்புகளை சரியாக குறிப்பிட்டிருப்பின் 03 புள்ளிகள்)

(iii) இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு குடிசைக் கைத்தொழில்கள் பங்களிப்புச் செய்யும் மூன்று விதத்தினை உதாரணங்கள் மூலம் விளக்குக.

- வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல். (உதா: பத்திக் கைத்தொழில்,பிரம்பு மற்றும் பனை கைத்தொழில்)
- உள்நாட்டு வருமானம் அதிகரித்தல்.(உதா: மட்பாண்டம்,மரதளபாடம்,தங்கம் மற்றும் வெள்ளி ஆபரண உற்பத்தி)
- அந்நிய செலாவணி அதிகரிப்பு. (உதா: பத்திக் உற்பத்தி,கைத்தறி,மரதளபாடம்,தெனனை சார் உற்பத்தி)
- கிராமிய பொருளாதா வளர்ச்சி. (உதா: குருணாகலை மற்றும் காலி பிரதேசங்களில் பனை மற்றும் பிரம்பு கைத்தொழில்
- சுற்றுலாதுறையை மேம்படுத்துதல். (உதா: முகமூடி, மரதளபாடங்கள்,களிமண் உருவங்கள்)
- உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்துல்.(உதா: தென்னஞ்சிரட்டை பொருட்கள்,மட்பாண்டம்,பிரம்பு பொருட்கள்)

(இவற்றுள் ஏதாவது மூன்றினை உதாரணங்கள் மூலம் **விளக்கியிருப்பின் மொத்தம் 05 புள்ளிகள்)**

06. (i). இலங்கையில் பாரம்பரிய இறப்பர் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் மாவட்டங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

- fSj;Jiw
- Nffhiy
- ,uj;jpdGup **(இவற்றுள் இரண்டினை சரியாக குறிப்பிட்டிருப்பின் 01 புள்ளி வீதம் - 02 புள்ளிகள்)**

(ii). இலங்கையின் இறப்பர் பயிர்ச்செய்கையில் தாக்கம் செலுத்தும் மானிட காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக.

- பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் (உள்நாடு/வெளிநாடு)
- போக்கவரத்து மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள்.
- சர்வதேச சந்தை.
- உள்ளூர் சந்தை
- அரச கொள்கைகள் மற்றும் நிதி வசதி,
- இறப்பர் பதனிடும் தொழிற்றுறை வளர்ச்சி.

(,tw;Ws; ஏதாவது மூன்று காரணிகளை சரியாக குறிப்பிட்டிருப்பின் 03 புள்ளிகள்)

(iii). இலங்கையின் இறப்பர் பயிர்ச்செய்கையுடன் தொடர்புடைய மூன்று பிரச்சினைகளை குறிப்பிட்டு, அவற்றுக்கான தீர்வுகள் இரண்டினை சுருக்கமாக விளக்குக.

பிரச்சினைகள்	தீர்வுகள்
இயற்கை இறப்பருக்கான உலக சந்தையின் விலை தளம்பல்கள்	- இறப்பர் உற்பத்திகளை பன்முகப்படுத்தல் - பெறுமதியான இறப்பர் உற்பத்தி பொருட்கள்
இயற்கை இறப்பருக்கிடையிலான போட்டி	- உயர்தரமான இறப்பர் உற்பத்தி - புதிய சந்தைகளை கண்டறிதல்.
இறப்பர் நிலங்கள் வேறு தேவைகளுக்காக பயன்படுத்தப்படல்.	- இறப்பர் செய்கை நிலங்களைப் பாதுகாத்தல் - பொருத்தமான நிலங்களை கண்டறிந்து மீளவும் செய்கை பண்ணுதல்.
தொழிலாளர் பற்றாக்குறை	- இறப்பர் செய்கையை இயந்திரமயமாக்குதல். - தொழிலாளர்களுக்கு சிறந்த வசதிகளையும், ஊக்குவிப்புகளையும் வழங்குதல்.
நோய்களும் பூச்சிகளின் தாக்கமும்	- நோய்களுக்கு தாக்கு பிடிக்கும் வகையில் புதிய இனங்களை கண்டபிடித்தல். - பொருத்தமான விவசாய தொழினுட்பத்தை பயன்படுத்தல் - இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் செயற்பாடுகளை அதிகரித்தல்
பழைய இறப்பர் மரங்களும்,குறைந்த விளைச்சலும்	- பழைய மரங்களுக்கு பதிலாக புதிய மரங்களை நடுதல். - புதிய செய்கை முறைகளை பயன்படுத்தல்
உற்பத்தி செலவு அதிகரித்தல்	- வினைத்திறனான பயிர்ச்செய்கை முறைமைகளை பயன்படுத்தல் - உற்பத்தி செலவினை குறைத்தல்.
காலநிலை மாற்றமும், பருவ கால மாற்றங்களும்.	- பொருத்தமான வேறு இடங்களில் செய்கை பண்ணுதல். - மண் மற்றும் நீர் பாதுகாப்பினை மேற்கொள்ளுதல்

(இவற்றுள் ஏதாவது பிரச்சினைகள மூன்றினை குறிப்பிட 1 புள்ளி வீதம் - 03 புள்ளிகள் + இரு தீர்வினை விளக்கியிருப்பின் 02 புள்ளிகள் = மொத்தம் 05 புள்ளிகள்)

Past Papers Wiki

07. (i). பௌதீக அனர்த்தம் அல்லாத அனர்த்தங்கள் இரண்டினை பெயரிடுக

- யுத்தம்
- பயங்கரவாதம்
- விபத்து (வாகன,கைத்தொழில்.சுரங்கம்,இரசாயன மற்றும் நச்சு பதார்த்தங்கள்,அணுசக்தி)
- கட்டிடங்கள் இடிந்து விழுதல்.

(இவற்றுள் இரண்டினை சரியாக குறிப்பிட்டிருப்பின் 01 புள்ளி வீதம் - 02 புள்ளிகள்)

(ii). நிலச்சரிவொன்றினை முன்கூட்டியே அறிந்து கொள்ளக்கூடிய மூன்று அறிகுறிகளை குறிப்பிடுக.

- திடிரென நீருற்றுகள் தோற்றம் பெறுதல்
- ஏற்கனவே காணப்பட்ட நீருற்றுகள்,கிணறுகள் வற்றி போதல்.
- வீடுகள், குடியிருப்புகள்,கட்டிடங்களில் வெடிப்புகள் தோன்றுதல்.
- பிரதேசத்தின் தாவரங்கள்,மின் கம்பங்கள்,தொலைபேசி கம்பங்கள் சரிதல்.
- சாய்வு பிரதேசத்தின் தாவரங்கள் திடிரென இறந்து போதல்.
- சாய்வு நிலங்களின் நீர் மூலாதாரங்களில் மாற்றம் ஏற்படுதல்.
- விலங்குகளின் நட;தையில் மாற்றம் ஏற்படுதல்.

(,tw;Ws; ஏதாவது மூன்று அறிகுறிகளை சரியாக குறிப்பிட்டிருப்பின் 03 புள்ளிகள்)

(iii). நிலச்சரிவு இடரினை இழிவளவாக்குவதற்கான நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை சுருக்கமாக விளக்குக.

- சாய்வு நிலங்களில் வடிகால்களை சீராகப் பேணுதல்.
- இயற்கை நீரோட்டங்களை தடை செய்யாமல் பேணுதல்.
- சாய்வு நிலங்களை பராமரிப்பதற்கு பல்வேறு நுட்ப முறைகளை பயன்படுத்துதல்.
- உயரமான இடங்களில் நீர்த்தேக்கங்களை அமைப்பதை தவிர்த்தல்.
- சாய்வு நிலங்களில் கட்டடங்கள் அமைப்பதை தவிர்த்தல்.
- மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்ததல்.

(இவற்றுள் ஏதாவது மூன்றினை குறிப்பிட 1 புள்ளி வீதம் - 03 புள்ளிகள் + அவற்றுள் ஒன்றினை விளக்கியிருப்பின் 02 புள்ளிகள் = மொத்தம் 05 புள்ளிகள்)

සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

08. (i). (a). தென் அமெரிக்கா கண்டத்தின் சனத்தொகை கூடிய நாட்டினையும்,

(b). ஆபிரிக்க கண்டத்தின் சனத்தொகை கூடிய நாட்டினையும் பெயரிடுக

(a). தென் அமெரிக்கா கண்டம் - பிரேசில்
(b). ஆபிரிக்க கண்டம் - நைஜீரியா

(இரண்டினை சரியாக பெயரிட்டிருப்பின் 01 புள்ளி வீதம் - 02 புள்ளிகள்)

(ii). உலகில் சனத்தொகை அடர்த்தி கூடிய பிரதேசங்களில் அவதானிக்க கூடிய பொதுவான பண்புகள் மூன்றினைக் குறிப்பிடுக.

- ஆற்றுப்பள்ளத்தாக்கு மற்றும் கரையோர பகுதிகளைச் சார்ந்து அமைந்திருத்தல்.
- உவப்பான காலநிலை காணப்படுதல்.
- நகரமயமாக்கல்
- வர்த்தகம் மற்றும் கைத்தொழில்மயமாக்கல்.
- விவசாயத்திற்கு சாதகமான காரணிகள்
- சிறந்த போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் வசதிகள்
- கல்வி மற்றும் சகாதார வசதிகள்.

(,tw;Ws; ஏதாவது மூன்று பண்புகளை சரியாக குறிப்பிட்டிருப்பின் 03 புள்ளிகள்)

(iii). அண்மைக்காலமாக குறைவடைந்து செல்லும் இலங்கையின் சனத்தொகை காரணமாக எதிர்காலத்தில் ஏற்பட கூடிய மூன்று பாதிப்புக்களை குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றினை சுருக்கமாக விளக்குக

- முதியோர் சனத்தொகை அதிகரித்தல்
- ஊழிய படை குறைவடைதல்.
- பொருளாதார வளர்ச்சி குறைவடைதல்
- தங்கி வாழ்வோர் தொகை அதிகரித்தல்
- அரச செலவீனங்கள் அதிகரித்தல்.
- பாடசாலை மற்றும் குழந்தைகளுக்கான கேள்வி குறைடைதல்.
- சனத்தொகை குறைவடையும் போக்கு காணப்படுதல்.

(இவற்றுள் ஏதாவது மூன்றினை குறிப்பிட 1 புள்ளி வீதம் - 03 புள்ளிகள் + அவற்றுள் ஒன்றினை விளக்கியிருப்பின் 02 புள்ளிகள் = மொத்தம் 05 புள்ளிகள்)

❋❋❋❋

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank